# கரூர் மாநகராட்சி

**2022ம் ஆண்டு ஜீன் மாதம் 30ம் தேதி வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்றக் கூட்ட அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.**

## பொருள்கள்

**1)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட எல்.என்.எஸ். கிராமம், புல எண்கள்.357–ல் 40அடி சாலை அமைக்க ஆட்சேபனை தெரிவித்து கரூர் மாவட்ட முனிசிப் நீதிமன்றம் வழக்கு எண்.O.S No.314/2019, I.A No.505/2019–ல் வாதிகள் திரு.R.சங்கரன், என்பவர் கரூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார்கள்.

மேற்படி வழக்கிற்கு மாநகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி வழக்கிணை நடத்துவதற்கு வக்காலத்து மற்றும் கடிதம் வழக்கறிஞர் திரு.பி.நகுல்சாமி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கிற்கு மாநகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கிணை நடத்துவதற்கு வழக்காடு கட்டணமாக ரூ.10000/–னை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**
கரூர் மாவட்ட முனிசிப் நீதிமன்றம் வழக்கு எண்.O.S No.314/2019, I.A No.505/2019–ல் மாநகராட்சி சார்பாகவும் வழக்கறிஞர் திரு.பி.நகுல்சாமி அவர்கள் வழக்கினை நடத்துவதற்கு வழக்காடு கட்டணம் ரூ.10000/–னை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மாமன்றம் அனுமதிக்கலாம்.
(எப்1/5588/2019)

**தீர்மான எண்.275** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**2)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட இனாம்கரூர் கிராமம், புல எண்கள்.308/C, 308/D –ல் 40அடி சாலை அமைக்க ஆட்சேபனை தெரிவித்து கரூர் மாவட்ட முனிசிப் நீதிமன்றம் வழக்கு எண்.O.S.No.346/2019, I.A No.542/2019–ல் வாதிகள் திரு.M.நடராஜன் மற்றும் பலர் கரூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார்கள்.

மேற்படி வழக்கிற்கு மாநகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி வழக்கிணை நடத்துவதற்கு வக்காலத்து மற்றும் கடிதம் வழக்கறிஞர் திரு.பி.நகுல்சாமி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கிற்கு மாநகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கிணை நடத்துவதற்கு வழக்காடு கட்டணமாக ரூ.10000/–னை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**
கரூர் மாவட்ட முனிசிப் நீதிமன்றம் வழக்கு எண்.O.S No.346/2019, I.A No.542/2019–ல் மாநகராட்சி சார்பாகவும் வழக்கறிஞர் திரு.பி.நகுல்சாமி அவர்கள் வழக்கினை நடத்துவதற்கு வழக்காடு கட்டணம் ரூ.10000/–னை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மாமன்றம் அனுமதிக்கலாம்.
(எப்1/5279/2019)

**தீர்மான எண்.276** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**3)** கரூர் நகரத்தில் இயங்கி வரும் பேருந்து நிலையம் தற்போதைய போக்குவரத்திற்கு போதுமானதாக இல்லாத சூழ்நிலையில் புதியதாக பேருந்து நிலையம் அமைக்க கருப்பம்பாளையம் ஊராட்சி திருமாநிலையூர் வருவாய் கிராமம் ராயனூர் பகுதியில் அமைந்துள்ள, புல எண்கள். 95/2, 97/2, 98/1, 113/1, 114/A2, 115/1பி, 116/2, 117/1, 118, 119, 120, 121, 122, 123/1, 146/A, 147/A1, 148/1, 149, 150/1, 151/1, 152/1பி, 243/2, 246/2, 247/2, மற்றும் 248/2 ஆகியவற்றில் உத்தேச அணுகு சாலை உள்பட மொத்தம் 12.14.ஏக்கர் பரப்பளவிலான இடத்தில் அமைப்பது தொடர்பாக திரு.பி.சரவணன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் பொதுநல வழக்கு தொடர்ந்ததில் வழக்கு எண்.W.P.(MD)No.3449/2017 நாள்.28/02/2017ல் புதிய பேருந்து நிலையத்தினை இரண்டு மாத காலத்திற்குள் ஏற்படுத்தப்பட வேண்டுமென தீர்ப்பில்

தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்மீது பேருந்து நிலையம் அமைக்க சுமார் 2 வருடங்கள் ஆகும் என்பதாலும், பேருந்து நிலைய கட்டுமான பணி வணிக திட்டம் என்பதால் அரசிடமிருந்து நிதி ஏதும் வழங்கப்படாது என்பதால் நகராட்சியில் சொந்த நிதியிலிருந்து மட்டுமே செயல்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கரூர் நகராட்சியில் கூட்டு குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணி ரூ.68.40 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் பேருந்து நிலையம் அமைக்க நிதி ஏற்பாடு செய்ய வேண்டியது மிக சிரமமான ஒன்றாகும் என்கிற விவரங்களை குறிப்பிட்டு 28.02.2017—ம் தேதிய உயர்நீதிமன்ற தீர்ப்பின்மீது சீராய்வு மனு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில். (Review application No.26/2017) வழக்கு எண்.WP(MD)No.3449/2017ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் திரு.பி.சரவணன் என்பவரால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண் Cont.,P(MD)No.345/2018ல் தொடரப்பட்டது.

அதனை தொடர்ந்து இவ்வழக்கில் 03.01.2019—ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவில் அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அவர்கள் மற்றும் நகராட்சி ஆனையர், கரூர் ஆகியோர் பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பான கால அட்டவணை குறிப்பிட்டு அறிக்கையை 08.01.2019 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். தவறும்பட்சத்தில் இவ்வழக்கின் எதிர்மனுதாரர்கள் அனைவரும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 09.01.2019 அன்று நேரில் ஆஜராக வேண்டும் என உத்தரவிடப்பட்டது. அதன்பேரில் அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் மதுரை உயர்நீதிமன்றத்தில் 09.01.2019 அன்று நேரில் ஆஜராகப்பட்டது.

அதனை தொடர்ந்து அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அவர்களால் 24 மாத கால அவகாசத்தில் பேருந்து நிலையம் கட்டப்படும் என குறிப்பிட்டு 11.01.2019—ல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கு முடித்து வைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து புதிய பேருந்து நிலையம் அமைக்க நிர்வாக அனுமதிக் கோரி திட்டக் கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலமாக அரசுக்கு சமர்பிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக அரசாணை எண்.65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.27.05.2019ல் Public Private Partnership Mode (PPP) அல்லது Design, built, finance, Operate and Transfer basis (DBFOT) முறையில் புதிய பேருந்து நிலையம் அமைக்கவும், அரசு நிர்வாக அனுமதிக்கு பின்னர், தமிழ்நாடு அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் வழிகாட்டுதலின்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு பேருந்து நிலைய கட்டுமான பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்கிற நிபந்தனையுடன் ரூ.47.00 கோடி (ரூபாய் நாற்பத்து ஏழு கோடி மட்டும்) மதிப்பீட்டில் பேருந்து நிலையம் அமைக்க நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் நிபந்தனைகளுக்கான தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்.65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.27.05.2019ன்படி Public Private Partnership Mode (PPP) அல்லது Design, built, finance, Operate and Transfer basis (DBFOT) முறையில் புதிய பேருந்துநிலையம் அமைக்கவுள்ள நிலையில் இடஉரிமை குறித்து வாரிசுகளிடையே வழக்கு தொடரப்பட்டுள்ளதாலும், ஐந்து ஆண்டுகளுக்குள் புதிய பேருந்து நிலையம் அமைக்காதபட்சத்தில் நிபந்தனையின்படி திரும்ப நிலத்தினை ஒப்படைக்ககோரி வழக்கு தொடரப்பட்டுள்ளதாலும், வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் ஒப்பந்தபுள்ளிகள் கோருவதற்கான பணிகள் நிலுவையில உள்ளது. இந்நிலையில் திரு.பி.சரவணன் என்பவர் கூடுதல் அரசு தலைமை செயலாளர் நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கும் துறை சென்னை (1), நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை (2) மற்றும் நகராட்சி ஆணையர் கரூர் ஆகியோர்களை பிரதிவாதிகளாக சேர்த்து மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு எண் Cont.P.(MD) No.1352 of 2020 in Cont. P.(MD) No.345 of 2018 in W.P.(MD) No.3449 of 2017—ல் அவமதிப்பு வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே மேற்படி வழக்கின் முக்கியத்துவத்தை கருதி அரசு சார்பாக Thiru.K.Chellapandian, ADDL.ADVOCATE GENERAL-III OF TAMILNADU அவர்களை நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கினை நடத்தியதற்காக ஆகும் அதற்கான செலவினங்களுக்கும் மாநகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்திட மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு எண் Cont.P.(MD) No.1352 of 2020 in Cont. P.(MD) No.345 of 2018 in W.P.(MD) No.3449 of 2017–ல் அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ளதற்கு மாநகராட்சி சார்பாகவும், அரசின் சார்பாகவும் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கினை நடத்தி வருவதற்கு Thiru.K.Chellapandian, ADDL.ADVOCATE GENERAL-III OF TAMILNADU அவர்களுக்கு மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மாமன்றம் முன்அனுமதி பெற்று தொகை வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2225/2015)

**தீர்மான எண்.277** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**4)** கரூர் மாநகரத்தில் புதியதாக பேருந்து நிலையம் அமைக்க கருப்பம்பாளையம் ஊராட்சி திருமாநிலையூர் வருவாய் கிராமம் ராயனூர் பகுதியில் அமைந்துள்ள, புல எண்கள்.95/2, 97/2, 98/1, 113/1, 114/A2, 115/1பி, 116/2, 117/1, 118, 119, 120, 121, 122, 123/1, 146/A, 147/A1, 148/1, 149, 150/1, 151/1, 152/1பி, 243/2, 246/2, 247/2, மற்றும் 248/2 ஆகியவற்றில் உத்தேச அணுகு சாலை உள்பட மொத்தம் 12.14.ஏக்கர் பரப்பளவிலான இடத்தை தானமாக பெற்று மேற்கண்ட இடத்தில் பேருந்து நிலையம் அமைக்க ஏகமனதாக தீர்மான எண்.1079, நாள்.28.12.2012 மற்றும் தீர்மான எண்.1445, நாள்.23.05.2013ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானம் இயற்றப்பட்டதற்கிணங்க அரசாணை (நிலை) எண்.87 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நீ.4) துறை நாள்.20.06.2013ல் கரூர் வட்டம் கருப்பம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட திருமாநிலையூர் கிராமத்தில் 12.14 ஏக்கர் பரப்பளவில் கரூர் நகராட்சிக்கு என புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

இந்நிலையில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பான அரசாணையை எதிர்த்து பல்வேறு வழக்குகள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் கீழ்க்கண்டவாறு தொடரப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாநகராட்சிக்கு புதிய பேருந்து நிலையத்திற்காக தானமாக வழங்கிய நில உரிமையாளர் திரு.நாச்சிமுத்து அவர்கள் மற்றும் சிலர் பேருந்து நிலைய பணிகள் 5 வருட காலத்திற்குள் நடைபெறாத நிலையில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையின்படி இடத்தினை திரும்ப வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP(MD)No.22551/2019-ல் அரசு முதன்மைச்செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அவர்கள், நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களையும் மற்றும் ஆணையாளர் கரூர் நகராட்சி அவர்களையும் எதிர்மனுதாரர்களாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார்கள்.

மேற்படி வழக்கிற்கு மாநகராட்சி சார்பாகவும், அரசு சார்பாகவும் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி Thiru.K.Chellapandian, ADDL.ADVOCATE GENERAL-III OF TAMILNADU அவர்கள் இவ்வழக்கினை நடத்தி வருவதற்கான ஆகும் செலவினங்களை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு எண் W.P.(MD) No.22551/2019-ல் வழக்கு தொடரப்பட்டுள்ளதற்கு மாநகராட்சி சார்பாகவும், அரசின் சார்பாகவும் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கினை நடத்தி வருவதற்கு ஆகும் செலவினங்களை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து Thiru.K.Chellapandian, ADDL.ADVOCATE GENERAL-III OF TAMILNADU அவர்களுக்கு வழங்கிட மாமன்றத்தின் முன்அனுமதி பெற்று தொகை வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/12225/2015)

**தீர்மான எண்.278** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**5)** கரூர்மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.41 K.K.நகர் பகுதிகளில் புதிய தெருவிளக்கு அமைக்க மின்வழி பாதை அமைத்து புதிய மின் இணைப்பு வழங்க ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.10746/–ஐ செலுத்த மாமன்ற அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.10746/–ஐ பொது நிதியில் இருந்து செலவினம் செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.

3)மேற்படி பணிக்கு அவசர நிலையை கருத்தில் கொண்டு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (7126/2021/இ3)

**தீர்மான எண்.279** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**6)** கரூர் மாநகராட்சி மண்டலம்– 2க்கு உட்பட்ட வார்டு எண்.32 மற்றும் 33–ல் உள்ள நரசிம்மபுரம் ( DSM காம்ப்ளக்ஸ் லைன்) பகுதிகளில் ஒரு மின்கம்பமும், நரசிம்மபுரம் (B பிளாக்) வடக்கு புறம் உள்ள பகுதிகளில் இரண்டு மின்கம்பமும், மேலும் வார்டு எண்.33–ல் உள்ள நரசிம்மபுரம் நடுத்தெரு (வெங்காய பேட்டை லைன்) பகுதிகளில் இரண்டு கம்பமும், ஆகிய மின்கம்பங்கள் சாலை மற்றும் சாக்கடைகள் அமைப்பதற்கு இடையூறாக இருப்பதால் அதை இடம் மாற்றி அமைக்க ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.**111835**/–க்கு மாமன்ற அனுமதி வேண்டி மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**111835**/–ஐ பொது நிதியில் இருந்து செலவினம் செய்ய அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணி அவசர நிலையை கருத்தில் கொண்டு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (7171/2021/இ3)

**தீர்மான எண்.280** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**7)** கரூர் மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 37–ல் போக்குவரத்து நகர் ஆயுதப் படையில் புதிய தெருவிளக்குகள் அமைக்க ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.25390/– ஐ தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் புலியூர் மேற்கு பிரிவு அவர்களுக்கு செலுத்த (அனுமதி எண்.14.626/ AE/J133/S011/22-23) மாமன்ற அனுமதி வேண்டி மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25390/–ஐ பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கலாம். (இ3/2022)

**தீர்மான எண்.281** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**8)** இம் மாநகராட்சியில் பணிகள் மேற்கொண்டு செய்து முடித்ததில் 2015–2016 முதல் 2019–2020 வரை ஆம் ஆண்டு பட்டியலில் பிடித்தம் செய்துள்ள ASD, FSD தொகையினை திரும்ப வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார். மேற்கண்ட ஒப்பந்ததாரர்க்கு பணிகள் வழங்கப்படாத காரணத்தினால் மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும் காலம் கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால் கீழ்க்கண்டவாறு ஒப்பந்ததாரர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | கோப்பு எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | 2379/2022/பி6 | பழனியப்பா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் | 44500 |
| 2 | 8038/2021/பி6 | பி.நல்லுசாமி | 14150 |
| 3 | 2339/2022/பி6 | ஆர்.தங்கவேல், ஒப்பந்ததாரர் | 11100 |
| 4 | 1858/2021/பி6 | ஸ்ரீசேரன் கன்ஸ்ட்ரக்சன் | 16850 |
| 5 | 2340/2022/பி6 | பழனியப்பா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் | 52500 |
| 6 | 1857/2021/பி6 | எம்.ஹேமலதா | 7000 |
| 7 | 10798/2021/பி6 | ஆர்.பி.எஸ்., கன்ஸ்ட்ரக்சன் | 99516 |
| 8 | 8365/2021/பி6 | எம்.லோகநாதன் | 464309 |
| 9 | 3287/2022/பி6 | டி.சுந்தர்ராஜ் | 9600 |
| | | **மொத்தம்** | **719525** |

**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். (பி6/2022)

**தீர்மான எண்.282** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**9)** கரூர் மாநகராட்சி பகுதியான இனாம் கரூர் மற்றும் கரூர் பகுதிகளில் (வார்டு எண்.1 முதல் 32 வரை) அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை திட்டத்தின்கீழ் அரசு காலனியில் ஒரு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையமும் (STP) ஒரு பிரதான கழிவு நீரேறறு நிலையமும் (Main Pumping station) இரண்டு இடங்களில் கழிவு நீருந்து நிலையங்களும் (Lifting pumping Station) 2.97 கி.மீ நீளத்திற்கு நீரேற்றும் பிரதான குழாய்களும் , 3013 பாதாள சாக்கடை ஆய்வு குழிகளும், 92.25கி.மீ நீளத்திற்கு பிரதான குழாய்களும் ஆகியவற்றினை பராமரிப்பு பணியினை மேற்கொள்ள மாநகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத நிலையில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளில் மாநகராட்சியில் நிதி சேமிப்பு ஏற்படும் நிலையை கருதியும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.69, நாள்.04.05.1999—ன்படி ஒப்பந்த அடிப்படையில் ஒரு மாத காலத்திற்கு 03.07.2021 முதல் 02.08.2021 வரை பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்ற தீர்மான எண்.293 நாள்.02.07.2021—ல் ஒப்புதல் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி புதை வடிகால் திட்ட பராமரிப்பு பணிகள் தனியார் மூலம் ஓராண்டுக்கான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று ஒப்பந்த புள்ளியினை இறுதி செய்து பணி உத்தரவு வழங்கிட மேலும் கால தாமதம் ஆகும் என்பதால் ஏற்கனவே இப் பணியினையே எடுத்துள்ள ஒப்பந்ததாரர் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள விலை விகிதத்திலேயே மேலும் மூன்று மாத காலம் புதை வடிகால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உதவி பொறியாளர் அவர்கள் குறிப்பு வழங்கியுள்ளார்.

எனவே 01.07.2022 முதல் 30.09.2022 வரை புதை வடிகால் திட்ட பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு ஏற்கனவே இப்பணியினை எடுத்துள்ள. ஒப்பந்ததாரர் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள விலை விகிதத்திலேயே பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ.17,25,,000/— க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி பணிக்கு ஏற்கனவே பணி உத்திரவு வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்ட விலை விகிதத்திலேயே பணிகள் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

3)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.17,25,000/—மாநகராட்சி வடிகால் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ5/12700/2021)

**தீர்மான எண்.283** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**10)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட நெரூர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள 40 HP. VT Motorல் Bearing சத்தம் அதிகமாக வருகிறது. எனவே புதிதாக Top bearing மற்றும் Bottom bearing மாற்றிட வேண்டியது அவசியமாகிறது. மேலும் Unit – I Motorக்கு கூடுதலாக 1 Column Pipe இறக்கினால் தான் மோட்டாரை தொடர்ந்து இயக்க இயலும் என்தாலும், கோடை காலத்தில் நீர் மட்டம் குறையும் வாய்ப்பு உள்ளதால் கூடுதலாக 1 Column Pipe இறக்கவும், புதிய Bearing மாற்றிட தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.75 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.75 இலட்சத்தை இம்மாநகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். (2874/2022/இ6)

**தீர்மான எண்.284** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**11)** கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான நெரூர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உயர்மின் அழுத்த மின் இணைப்பிற்காக 500 KVA மின்மாற்றி இரண்டு உள்ளது. தற்பொழுது ஒரு மின் மாற்றி மட்டும் இணைப்பில் உள்ளது. மற்றொரு மின் மாற்றியில் வைண்டிங் செய்து மாற்று இணைப்பு கொடுக்கவும் மின் மாற்றிக்காக OIL Calibration reistance test Transformer General test செய்து இயக்க வேண்டியுள்ளதுமேலும் HP மின்மோட்டாருக்கான Bus berல் 400 Ams. Moulded case Circuit brakes 2 எண்கள், 45 HP மின்மோட்டாருக்கான 250 Ams mcc B'2 எண்கள் மாற்றுவதற்கும் தயார் செய்துள்ள மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.00 இலட்சத்தை இம்மாநகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். **(இ6/2022)**

**தீர்மான எண்.285** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**12)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–IV வார்டு எண்.36,37,43,44,45,46,47 மற்றும் 48 ஆகிய பகுதிகளில் சாலையோரங்களில் உள்ள புதர்கள் மற்றும் செடிகளை அகற்றி JCB இயந்திரம் மூலம் சுத்தம் செய்யும் பணிக்கு ரூ.3.60 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை. |
|---|---|---|
| 1) | Thiru.Boopathi, Karur | 0.49% குறைவு |
| 2) | Thiru. P.Nallusamy, Karur | 0.75% அதிகம் |
| 3) | Sri Krishana Traders, Karur | 1.37% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1)மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Thiru.Boopathi, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.3,60,000/-மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம். **(இ1/7348/2021)**

**தீர்மான எண்.286** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**13)** கரூர் மாநகராட்சி தூய்மை இந்திய இயக்கம் (ந) திட்டத்தின்கீழ் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு 24 பரப்புரையாளர்கள், 3 மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒரு ஒருங்கிணைப்பாளர் வெளிக்கொணர்வு முகமை மூலம் வழங்கும் பணியின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 14.04.2022ம் தேதி அன்று மேற்படி பணி செய்து முடிக்க வேண்டிய காலம் 4 ஆண்டுகள் என்று அறிவிக்கப்பட்டதை காலம் 1 ஆண்டு என திருத்தம் செய்து 23.04.2022ம் தேதி அன்று NIDUS Advertising & Marketing Private Limited, Chennai மூலமாக மாநில அளவில் ஆங்கில செய்தித்தாளில் விளம்பரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம் ரூ.38254 /–ஐ NIDUS Advertising & Marketing Private Limited, Chennai அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்காணும் செலவினத்தொகை ரூ.38254/– பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/1243/2021)**

**தீர்மான எண்.287** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**14)** கரூர் மாநகராட்சியில் **15வது நிதிக் குழு மானியம் (15th CFC) 2021–2022**ஆம் ஆண்டின்கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 14.05.2022ம் தேதி அன்று மாநில அளவில் மாலை தமிழகம் நாளிதழில் மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ.27,216/–ஐ மாலை தமிழகம்,சென்னை அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்காணும் செலவினத் தொகை ரூ.27,216 /– வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/1245/2021)

**தீர்மான எண்.288** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**15)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் கடந்த ஒரு வருடம் காலமாக நடைபெற்று வரும் பணிகள் / நடைபெற உள்ள பணிகள் விபரங்களை 07.05.2022 தேதிகளில் தினதந்தி நாளிதழில் பொதுமக்கள் அறியும் வண்ணமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ.24780 /– The Daily Thanthi, Trichy அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்காணும் செலவினத் தொகை ரூ.24780/– வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2707/2022)

**தீர்மான எண்.289** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**16)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் கடந்த ஒரு வருடம் காலமாக நடைபெற்று வரும் பணிகள்/ நடைபெற உள்ள பணிகள் விபரங்களை 08.05.2022 தேதிகளில் தினமலர் நாளிதழில் பொதுமக்கள் அறியும் வண்ணமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ.32550 /– Raj Communication, Karur அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்காணும் செலவினத் தொகை ரூ.32550/– வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2707/2022)

**தீர்மான எண்.290** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**17)** சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021–2022 ஆண்டின்கீழ் கரூர் மாநகராட்சி வார்டு எண்.43 கோடங்கிபட்டி பட்டாளம்மன் கோவில் அருகில் (வடக்கு) சின்டெக்ஸ் டேங்க் வைத்தல் பணிக்கு முதன்முறையாக 24.05.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.1.50லட்சம்</u>**

1. M/s,Mallika Engineering Contractor, Karur மதிப்பீட்டைவிட 0.38% சதம் குறைவு
2. M/s,Navaladiyan Electrical Rewinding works, Karur மதிப்பீட்டைவிட 1.25% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ3/3516/2021–1 நாள்.27.04.2022ல் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது

2 மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s,Mallika Engineering Contractor, Karur

ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.

3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/11393/2021)

**தீர்மான எண்.291** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**18) மூல தன மானிய நிதி (CGF) 2020–2021**ன்கீழ் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வாங்கல் சாலையில் அமைந்துள்ள 15MLD கொள்ளவுள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் ஆன்லைன் வழி தொடர்ச்சியான கழிவு நீர் கண்காணிப்பு அமைப்பு (Online Continuous Effuent Monitoring System (OCEMS) நிறுவும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.17021/2021/இ2, நாள்.22.10.2021ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணியினை ரூ.49.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள முதன் முறையாக 20.05.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்புந்தப் புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.49.00லட்சம்</u>**

1. M/S.RL.Technologies Pvt Ltd, Chennai மதிப்பீட்டு விலை விகிதம்
2. M/S.Swaraj Equipment Pvt Ltd, Chennai மதிப்பீட்டைவிட 1.22% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. **மூலதன மானிய நிதி (CGF) 2020–2021**ன் திட்டத்தில் ஒதுக்கிடு செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.49.00 இலட்சம் செலவு செய்து கொள்ள மாமன்ற தீர்மான எண்.147, நாள்.27.05.2022ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.RL.Technologies Pvt Ltd, Chennai ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. இப்பணி திட்டப்பணியாக இருப்பதினால் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம். (இ5/10169/2021)

**தீர்மான எண்.292** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**19)** கரூர் மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஒரு நாள் மட்டும் புத்தாக்கப்பயிற்சி Dr.M.பாரிவள்ளல் அவர்கள் மூலம் பயிற்சி வகுப்பு நடத்தியதற்கான **ரூ.29,500/–** ஐ உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன்கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி பயிற்சி வகுப்பிற்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று Dr.M.பாரிவள்ளல் அவர்களுக்கு ரூ.29,500 /–ஐ மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளமாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ1/2350/2022)

**தீர்மான எண்.293** பதிவு செய்யப்பட்டது.

**20)** கரூர் மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஒரு நாள் மட்டும் புத்தாக்கப்பயிற்சி ஒரு நாள் நடத்திடவும், அதற்கான கூட்ட அரங்கை KRV Meridian Hotel ல் பயன்படுத்திடவும், காலை சிற்றுண்டி மற்றும் மதிய உணவுடன் சேர்த்து வாடகையாக **ரூ.60000/–ஐ** KRV Meridian Hotel நிறுவனத்திற்கு உடனடியாக செலுத்த வேண்டியுள்ளதால் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
மேற்படி பயிற்சி வகுப்பினை KRV Meridian Hotel ல் நடத்தியதற்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று KRV Meridian Hotel அவர்களுக்கு ரூ.60000 /–ஐ மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ1/2350/2022)

**தீர்மான எண்.294** பதிவு செய்யப்பட்டது.

**21)** கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான நெரூர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் KFW Schemeல் உள்ள 45 எச்.பி மின் மோட்டார் மற்றும் 110 திட்டத்தில் உள்ள 25எச்.பி மின்மோட்டார் காயில் பழுதடைந்து விட்டது. குடிநீர் பணியின் அவசியம் கருதி இப்பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட பணிக்கு ரூ.3,90,000/–மதிப்பீட்டில் தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | Mallika Engineering Contractor, Karur | 0.07% குறைவு |
| 2) | Navaladiyan Electrical & Rewinding works, Karur | 1.01% அதிகம் |
| 3) | Sivasakthi Engineering works, Karur | 1.51% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**
1) மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Mallika Engineering Contractor, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.3,88,200 /-மாநகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ6/ /2022)

**தீர்மான எண்.295** பதிவு செய்யப்பட்டது.

**22)** கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான நெரூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள நீர் சேகரிக்கும் கிணறு (Collector well)ல் உள்ள Radial arms துளைகள் தூர்ந்துவிட்டதால் போதிய நீர் ஊற்று கிடைக்காமல் மின் மோட்டாரை தொடர்ந்து இயக்க இயலாமல் உள்ளது. எனவே நீர் சேகரிக்கும் கிணற்றில் தூர்வாரி Radial Arms Compressor கொண்டு Flushing செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.90 இலட்சத்திற்கு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | A Sun Power Engineers, Karur | 0.05% குறைவு |
| 2) | P.Nallusamy, Karur | 0.49% அதிகம் |
| 3) | Nathan Engineering, Karur | 1.73% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**
1) மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள A Sun Power Engineers, Karurஅவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.4,63,643/-மாநகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ3/2289/2022)

**தீர்மான எண்.296** பதிவு செய்யப்பட்டது.

**23)** கரூர் மாநகராட்சிக்கு வாங்கல் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள உறைகிணறுகளில் (I, II) நீருந்று குறைந்து விட்டதால் மின்மோட்டாரை தொடர்ந்து இயக்க முடியவில்லை. இரண்டு உறைகிணறுகளிலும் கூடுதலாக 6 எண்ணிக்கை வடிகால் குழாய்கள் அமைக்கவும், 3 எண்கள்

உறை கிணறுகளை துார் வாரும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.75 இலட்சத்திற்கு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | A Sun Power Engineers, Karur | 0.10% குறைவு |
| 2) | P.Nallusamy, Karur | 0.21% அதிகம் |
| 3) | Nathan Engineering, Karur | 1.19% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**
1) மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள A Sun Power Engineers, Karurஅவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.254738/-மாநகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ3/2288/2022)

**தீர்மான எண்.297** பதிவு செய்யப்பட்டது.

**24)** கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான வாங்கல் தலைமை நீரேற்றும் நிலையம் அமைந்துள்ள நீர் உறிஞ்சும் கிணற்றின் 300 மி.மீ விட்டமுள்ள Radial Arms Slot தூர்ந்துள்ளது போதிய அளவு நீர் வரத்து இல்லாமையால் நீர் மட்டம் குறைந்து மின் மோட்டார் இயக்க இயலாத சூழல் உள்ளது. எனவே குடிநீர் பணியின் அவசியம் கருதி Air Compressor கொண்டு Flushing செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | A Sun Power Engineers, Karur | 0.05% குறைவு |
| 2) | P.Nallusamy, Karur | 0.49% அதிகம் |
| 3) | Nathan Engineering, Karur | 1.74% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**
1) மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள A Sun Power Engineers, Karurஅவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.4,25,263/-மாநகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ3/2286/2022)

**தீர்மான எண்.298** பதிவு செய்யப்பட்டது.

**25)** கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான நெரூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள உறை கிணறுகள் I, IIல் உள்ள குடிநீர் குழாய்கள் பழுதடைந்துவிட்டது (அதிக அளவு நீரோட்டம் காரணமாக) எனவே புதிய குழாய்கள் மற்றும் மின்மோட்டார் பொருத்தி கூடுதல் குடிநீர் எடுக்க வேண்டியது அவசியமாகிறது. தற்பொழுது காவிரி ஆற்றில் நீர் மட்டம் குறைந்து விட்டதால் கூடுதலாக உறை கிணறுகளில் மின் மோட்டார் பொருத்தி குடிநீர் எடுக்கத் தயார் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | A Sun Power Engineers, Karur | 0.09% குறைவு |
| 2) | P.Nallusamy, Karur | 0.45% குறைவு |
| 3) | Nathan Engineering, Karur | 0.69% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**
1) மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள A Sun Power Engineers, Karurஅவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ3,18,354/-மாநகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ3/2022)

**தீர்மான எண்.299** பதிவு செய்யப்பட்டது.

**26)** நகர்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல்—2022 தேர்தல் அறிவிப்புகள் மாநில தேர்தல் ஆணையத்தால் 26.01.2022 அன்று அறிவிக்கப்பட்டதின் பேரில் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 48 வரையுள்ள பகுதிகளில் வாக்காளர்களின் பார்வையில் தெரியும்படி உள்ள அரசியல் கட்சி தலைவர்களின் படங்கள், கட்சி சின்னங்கள் மற்றும் கட்சியின் பெயர்களை உடனுக்குடன் சுண்ணாம்பு பூசி அழித்து அறிக்கை சமர்ப்பிக்க மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்டதின் பேரில், மேற்கண்ட பணிகளை மாநகராட்சி சுகாதார பணியாளர்களை கொண்டு மேற்கொள்ள தேவையான சுண்ணாம்பு மற்றும் காலி பிரஷ்கள், பக்கெட்டுகள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கும் பணிக்கு ரூ.1.10,000/—மதிப்பீட்டில் தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | Vangalamman Electricals, Karur | 0.20% குறைவு |
| 2) | Mallika Engineering Contractor, Karur | 0.86% அதிகம் |
| 3) | M/s.Navaladiyan Electricals & Rewinding works, Karur | 2.94% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**
1) மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Vangalamman Electricals, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.1,08,210/- மாநகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ1/11387/2021)

**தீர்மான எண்.300** பதிவு செய்யப்பட்டது.

**27)** வேளாண்மை துணைஇயக்குநர், வேளாண்வணிகம், கரூர் அவர்களின் கடிதத்தில் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட தாந்தோணி கிராமம், காந்திகிராமம் பகுதியில் புல எண்.362,363 ரயத்துவாரி புஞ்சை.50.27செண்ட்(21900சதுரடி) நிலத்தினை உழவர்சந்தை அமைப்பதற்கு உரிய நில ஒதுக்கீடு மற்றும் அனுமதி ஆணைகள் வழங்கிட கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.10159/2021/எப்1, நாள்.07.01.2022—ம் தேதி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு முகவரியிட்ட கடிதத்தில் மேற்படி இடத்தினை வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் துறைக்கு நில உரிமை மாற்றம் செய்ய உரிய பிரேரணைகள் அனுப்பி வைக்கப்படுகிறது என்றும் அதனை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து இணை இயக்குநர் (மாநகராட்சி), நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3581/2022/மாநஆ—2, நாள்.07.04.2022—ஆம் தேதிய கடிதத்தில் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட காந்திகிராமம், புல எண்.362 மற்றும் 363 பகுதியில் அமைந்துள்ள Existing Sewage Work என வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் Sewage Plant Well மற்றும் திடக்கழிவு மேலாண்மை செய்யும் இடம் போக மீதமுள்ள 17,425 சதுர அடி நிலத்தில் உழவர் சந்தை அமைக்க துறையின் அனுமதி வழங்குமாறு கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கடிதம் ந.க.எண்.ஆ1/9608/2021, நாள்.29.01.2022—ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக

தெரிவித்துள்ளார்கள். மேலும் கரூர் மாநகராட்சியில் உழவர் சந்தை அமைக்க ஏதுவாக நிலம் ஒதுக்கீடு செய்ய கோருவது குறித்து முழு கருத்துருவினை இணை இயக்குநர் (மாநகராட்சி), நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்னை, அவர்களின் கடிதம் ந.க.எண்.3581/2022/மாநஆ–2, நாள்.07.04.2022 உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மாமன்ற பொறியாளர் அவர்களின் குறிப்பில் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட தெற்கு காந்திகிராமம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பகுதியில் புல எண்.362பகுதி மற்றும் 363பகுதியில் Existing Sewage Work பகுதி என வகைபாடு உள்ள இடத்தில் தற்பொழுது கழிவு நீர் சுத்திகரிப்பு பணிகள் ஏதும் செய்யப்படவில்லை, தற்பொழுது தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி பகுதிகளுக்கான புதை வடிகால் திட்ட விரிவான அறிக்கையில் மேற்படி இடத்தில் ஏதும் பயன்படுத்தவில்லை என்பதாலும் இந்த இடத்தில் உழவர் சந்தை அமைக்க தடை ஏதுமில்லை என தெரிவித்துள்ளார்.

அரசாணை நிலை எண்.35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2)துறை, நாள்.17.02.1997–ல் நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்கு சொந்தமான பட்டா நிலமாக இருக்குமேயானால் அது எந்த அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனத்திற்குத் தேவையானதும், அதனை அப்போதைய சந்தை மதிப்பு (Market Value of at the Time) அடிப்படையில்தான் கொடுக்க வேண்டுமென உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே கரூர் மாநகராட்சிக்குட்பட்ட தாந்தோணி கிராமம் காந்திகிராமம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய காலணியில் அமைந்துள்ள சர்வே எண்.362பகுதி மற்றும் 363பகுதியில் அமைந்துள்ள Existing Sewage Work என வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் Sewage Plant Well மற்றும் திடக்கழிவு மேலாண்மை செய்யும் இடம்போக மீதமுள்ள 17425சதுர அடி நிலத்தினை உழவர் சந்தை அமைக்க வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகதுறைக்கு நில உரிமை மாற்றம் செய்ய மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு சந்தை மதிப்பு அடிப்படையில் கொடுக்க முன் நுழைவு அனுமதி வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களுக்கு கேட்டுக்கொள்ளப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3581/2022/டிபி1, நாள்.01.06.2022–ல் அரசாணை நிலை எண்.194, வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலம் (வே.வி.3), நாள்.17.11.2021–ல் புதிய உழவர் சந்தை அமைக்க ரூ.60,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாலும், இம்மாமன்றத்தீர்மான எண்.132, நாள்.27.05.2022–ல், மாமன்றத் தீர்மானத்தில் நிலம் மாற்றம் செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாலும், மாவட்ட ஆட்சித்தலைவர் கரூர் அவர்களால் மேற்படி நில மாற்றம் செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாலும் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட தாந்தோணி கிராமத்தில் காந்திகிராமம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய காலணியில் மாநகராட்சி பராமரிப்பில் உள்ள சர்வே எண்.362பகுதி மற்றும் 363பகுதியில் அமைந்துள்ள Existing Sewage Work என வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் Sewage Plant Well மற்றும் திடக்கழிவு மேலாண்மை செய்யும் தவிர்த்து மீதமுள்ள 17425சதுர அடி நிலத்தினை அரசாணை நிலை எண்.35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள்.17.02.1997–ல் நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்கு சொந்தமான பட்டா நிலமாக இருக்குமேயானால் அது எந்த அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனத்திற்குத் தேவையானாலும், அதனை அப்போதைய சந்தை மதிப்பு (Market Value of at the time) அடிப்படையில்தான் கொடுக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர், கரூர் மற்றும் அரசு நிர்ணயம் செய்யும் சந்தை மதிப்பு தொகையினை செலுத்த வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு முன்நுழைவு அனுமதியினை கரூர் மாநகராட்சி ஆணையர் அவர்கள் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு அளித்திட ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே மாவட்ட ஆட்சியர் கரூர் மற்றும் அரசு நிர்ணயம் செய்யும் சந்தை மதிப்பு தொகையினை செலுத்த வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு முன் நுழைவு அனுமதியினை கரூர் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறைக்கு அளித்திடவும், மேற்படி இடத்திற்கு சந்தை மதிப்பினை நிர்ணயம் செய்து வழங்கக் கோரி மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களுக்கு கடிதம் வைக்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3581/2022/டிபி1, நாள்.01.06.2022–ல் அரசாணை நிலை எண்.194, வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலம் (வே.வி.3), நாள்.17.11.2021–ல் புதிய உழவர் சந்தை அமைக்க ரூ.60,00,000/– நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளதாலும், இம்மாமன்றத்தீர்மான எண்.132, நாள்.27.05.2022–ல், மாமன்றத் தீர்மானத்தில் நிலம் மாற்றம் செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாலும், மாவட்ட ஆட்சித்தலைவர் கரூர் அவர்களால் மேற்படி நிலமாற்றம் செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாலும் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட தாந்தோணி கிராமத்தில் காந்திகிராமம் தமிழ்நாடு வீட்டுவசதிவாரிய காலணியில் மாநகராட்சி பராமரிப்பில் உள்ள சர்வே எண்.362பகுதி மற்றும் 363பகுதியில் அமைந்துள்ள Existing Sewage Work என வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் Sewage Plant Well மற்றும் திடக்கழிவு மேலாண்மை செய்யும் தவிர்த்து மீதமுள்ள 17425சதுர அடி நிலத்தினை அரசாணை நிலை எண்.35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள்.17.02.1997–ல் நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்கு சொந்தமான பட்டா நிலமாக இருக்குமேயானால் அது எந்த அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனத்திற்குத் தேவையானாலும், அதனை அப்போதைய சந்தை மதிப்பு (Market Value of at the time) அடிப்படையில்தான் கொடுக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர், கரூர் மற்றும் அரசு நிர்ணயம் செய்யும் சந்தை மதிப்பு தொகையினை செலுத்த வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு முன்நுழைவு அனுமதியினை கரூர் மாநகராட்சி ஆணையர் அவர்கள் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு அளித்திட ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே மாவட்ட ஆட்சியர் கரூர் மற்றும் அரசு நிர்ணயம் செய்யும் சந்தை மதிப்பு தொகையினை செலுத்த வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு முன்நுழைவு அனுமதியினை கரூர் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு அளித்திடவும், மேற்படி இடத்திற்கு சந்தை மதிப்பினை நிர்ணயம் செய்து வழங்கக்கோரி மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களுக்கு கடிதம் வைக்கவும் மாமன்றம் ஒப்புதல் செய்யலாம். **(10159/2021/எப்1)**

**தீர்மான எண்.301** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**28)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட தோரணக்கல்பட்டி கிராமம், புல எண்கள்.263, 264,265/1–ல் இலங்கை அகதிகள் முகாம் அமைப்பது தொடர்பாக வாதி திரு.பி.பழனிச்சாமி என்பவர், 1வது பிரதிவாதியாக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, 2வது பிரதிவாதியாக முதன்மை செயலாளர் , போக்குவரத்து துறை, 3வது பிரதிவாதியாக முதன்மை செயலாளர் / ஆணையாளர், அகதிகள் முகாம், 4வது பிரதிவாதியாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, 5வது பிரதிவாதியாக மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர். 6வது பிரதிவாதியாக மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு போக்குவரத்து கழகம் கும்பகோணம், 7வது பிரதிவாதியாக ஆணையாளர், கரூர் மாநகராட்சி மற்றும் 8வது பிரதிவாதியாக வட்டார வளர்ச்சி அலுவலர், தாந்தோணி ஊராட்சி ஒன்றியம் ஆகியோர்களை சேர்த்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வழக்கு எண்.W.P.(MD) No.9786/2022–ல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கினை மாநகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கினை நடத்துவதற்கு மாநகராட்சி வழக்கறிஞர் திரு.K.பாலசுப்பிரமணி அவர்களுக்கு வக்காலத்து மற்றும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வழக்கிற்கு அரசு சார்பாகவும் மற்றும் மாநகராட்சி சார்பாகவும் கூடுதல் அரசு வழக்கறிஞர் மற்றும் மாநகராட்சி வழக்கறிஞர் ஆகியோர் இணைந்து வழக்கினை நடத்துவதற்கு வழக்காடு கட்டணம் மற்றும் இதர செலவுகளை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**
சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளை வழக்கு எண்.W.P.(MD)No.9786/2022–ல் அரசு சார்பாகவும் மற்றும் மாநகராட்சி சார்பாகவும் கூடுதல் அரசு வழக்கறிஞர் மற்றும் மாநகராட்சி வழக்கறிஞர் ஆகியோர் இணைந்து வழக்கினை நடத்துவதற்கு வழக்காடு கட்டணம் மற்றும் இதர செலவுகளை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மாமன்றம் அனுமதிக்கலாம்.
**(3707/2022/எப்1)**

**தீர்மான எண்.302** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**29)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 48 வரையுள்ள பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் 11575 எண்களை பரிட்சார்த்த முறையில் எரியாத விளக்குகளின் விபரங்களை கண்டறிதல் எரியாத விளக்குகளின் மின் உதிரி பாகங்கள் வழங்கி பணியாளர்கள் மூலம் கம்பத்தில் எரிய வைத்தல் கண்ட்ரோல் சுவிட்சுகள் ON &OFF செய்யும் பணிகள் மேற்கொள்ளுதல் மின் வாரியத்திடம் Line Clearance பணிகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி

அடிப்படையில் பணி மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு இன்சூரன்ஸ் மருத்துவ காப்பீடு சேமநலநிதி உள்பட அனைத்து பணிகள் வகையினத்திற்கான செலவினங்களுடன் **11575** எண்கள் தெருவிளக்குகளையே ஒப்பந்த அடிப்படையில் சங்கர் ஆனந்த் இன்ப்ரா கரூர் தனியார் நிறுவனம் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் **2021–2022** பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக ஆணை பெறுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரை ஜீலை **2021** மாதத்திற்கு தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**9.65** இலட்சத்திற்கு **02.07.2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்த நிறுவனத்திற்கு **03.07.2021** முதல் **02.08.2021** வரை பணியை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.**292** நாள்.**02.07.2021** அனுமதிக்கப்பட்டு **03.07.2021** அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டது. நிர்வாக அனுமதி பெற காலதாமதமானதால் மேலும் **3** மாத காலத்திற்கு **02.10.2021** முதல் **02.01.2022** வரை பணி உத்தரவு வழங்கப்பட்டு தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் **3**மாத காலத்திற்கு **01.04.2022** முதல் **30.06.2022** முடிய பணியை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.**34** நாள்.**31.03.2022**ல் அனுமதிக்கப்பட்டு **01.04.2022** அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டது. இம் மாநகராட்சி பகுதியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் தனியார் ஒப்பந்த நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் ஒப்பந்த காலம் **30.06.2022**ல் முடிவடைய உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் நிர்ணயம் செய்யப்பட்ட அளவுகோலின்படி தெருவிளக்குகளின் பராமரிப்பு பணியை ஓர் ஆண்டுகளுக்கு தனியார் மூலம் மேற்கொள்ள கருத்துரு தயார் செய்து நிர்வாக அனுமதி வழங்க வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெறுவதற்கு காலதாமதம் ஆகுவதால் தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசியம் கருதி **01.07.2022** முதல் **30.09.2022** வரை ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத் தொகை ரூ.**29.00** லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
**1)**மாநகராட்சியில் உள்ள தெருவிளக்குகள் பராமரிக்கும் பணி மூன்று மாத காலத்திற்கு **01.07.2022** முதல் **30.09.2022** வரையிலான காலத்திற்கு தெருவிளக்கு பராமரிக்கும் பணியை **02.07.2021** அன்று பெறப்பட்ட திரு.சங்கர் ஆனந் இன்ஃரோ நிறுவன ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், அதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**29.00** லட்சத்தில் பணிகள் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
**2)**மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.**29.00** லட்சத்திற்கு மாநகராட்சியின் வருவாய் நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ3/10042/2021)**

**தீர்மான எண்.303** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**30)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–II, வார்டு எண் **20** முதல் **27** வரை மற்றும் வார்டு எண்.**29** முதல் **35** வரையுள்ள பகுதிகளில் அதிக கனரக வாகன போக்குவரத்து காரணமாக ஆய்வுக்குழி தொட்டியின் மூடிகள், சிறுபாலத்தில் பொருத்தப்பட்டுள்ள இரும்பு மூடிகள் சேதமடைகின்றன. குடிநீர் விநியோகத்திற்கு பயன்படும் வால்வு சேம்பர் பகுதியில் உள்ள Precast slab–கள் சேதமடைந்துள்ளது. இதனால் பொதுமக்களுக்கும் போக்குவரத்தும் இடையூறாக உள்ளது.

எனவே கரூர் மாநகராட்சி மண்டலம்–IIக்குட்பட்ட வார்டு பகுதிகளில் உள்ள புதை வடிகால் திட்ட ஆய்வுக் குழி மூடிகள் சேதமடைந்துள்ளதை மாற்றிடவும், சிறுபாலங்களில் பொருத்தப்பட்டுள்ள இரும்பு கிரில் பழுதானதை மாற்றிடவும் ரூ.**7.00** லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மதிப்பீட்டிற்கும், பணிகள் மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
**1)**மாமன்றம் அனுமதிக்கலாம்.

**2)**கரூர் மாநகராட்சி மண்டலம்–IIக்குட்பட்ட வார்டு பகுதிகளில் உள்ள புதை வடிகால் திட்ட ஆய்வுக்குழி மூடிகள் சேதமடைந்துள்ளதை மாற்றிடவும், சிறுபாலங்களில் பொருத்தப்பட்டுள்ள இரும்பு கிரில் பழுதானதை மாற்றிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
**3)**இப்பணிக்கான செலவினம் ரூ.**7.00**லட்சம் மாநகராட்சி வடிகால் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(4105/2022/இ5)**

**தீர்மான எண்.304** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**31)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் குடிநீர் பணிகள் மற்றும் பொதுசுகாதாரப் பணிகளை ஆய்வு செய்வதற்காக மதிப்பிற்குரிய மேயர், துணை மேயர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு புதியதாக மூன்று TOYOTA INNOVA – CRYSTA வாகனங்கள் Coimbatore Anamallais Agencies Private Limited Trichy நிறுவனத்திடம் கொள்முதல் செய்யப்பட்டது. மேற்படி மூன்று வாகனங்களுக்கும் எந்தவித பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்காக கூடுதல் பொருட்கள் (Extra Fittings) வாங்குவதற்கு தயாரிப்பு நிறுவனமான Coimbatore Anamallais Agencies Private Limited Trichy அவர்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டதில், ஒரு TOYOTA INNOVA – CRYSTA வாகனத்திற்கு கூடுதல் பொருட்கள் (Extra Fittings) கீழ்கண்டவாறு பொருத்திட ரூ.**47,705/–** என விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| Sl.No. | Name of Accessories | Price |
|---|---|---|
| 1 | MUD GUARD | 3,200 |
| 2 | SIDE STEP | 17,500 |
| 3 | REAR BIKE PROTECTOR (BLACK) | 12,000 |
| 4 | ROOTS HORN MEGASINIC & WIRING KIT | 3,210 |
| 5 | SUND CONTROL FILM (WURTH) | |
| | COOLING FILM PX50 | 4,570 |
| | FRONT WINSHIELD FILM PX70 | 3,725 |
| 6 | FLOOR MAT SYNTHETIC (FULL MAT) | 3,500 |
| | **TOTAL** | **47,705** |

எனவே, மேற்படி மூன்று TOYOTA INNOVA – CRYSTA வாகனங்களுக்கு கூடுதல் பொருட்கள் (Extra Fittings) பொருத்துவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.**1,50,000/–**க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
**1)**மாமன்றம் அனுமதிக்கலாம்.
**2)**மேற்படி புதிய மூன்று TOYOTA INNOVA – CRYSTA வாகனங்களுக்கு கூடுதல் பொருட்கள் (Extra Fittings) பொருத்துவதற்கு தயாரிப்பு நிறுவனமான Coimbatore Anamallais Agencies Private Limited Trichy அவர்களிடம் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
**3)** மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
**4)**மேற்படி பணிக்காகும் செலவினத் தொகையினை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/1801/2022)**

**தீர்மான எண்.305** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**32)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் குடிநீர் பணிகள் மற்றும் பொதுசுகாதாரப் பணிகளை ஆய்வு செய்வதற்காக மதிப்பிற்குரிய மேயர், துணை மேயர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு புதியதாக மூன்று TOYOTA INNOVA – CRYSTA வாகனங்கள் Coimbatore Anamallais Agencies Private Limited Trichy நிறுவனத்திடம் கொள்முதல் செய்யப்பட்டது. மேற்படி ஒரு வாகனத்திற்கு பதிவு கட்டணம், சாலை வரி மற்றும் இதர வரிகள் கீழ்கண்டவாறு விவரப்படி

செலுத்தப்பட வேண்டுமென கரூர் வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்திலிருந்து வரப்பெற்றுள்ளது.

| Sl.No. | Description | Amount |
|---|---|---|
| 1 | New Registration | 600 |
| 2 | Smart Card Fee | 200 |
| 3 | MV Tax | 3,67,200 |
| 4 | Road Safety Tax / Cess | 1,500 |
| 5 | Service Charge Fee | 200 |
| | **TOTAL** | **3,69,700** |

எனவே, மேற்படி மூன்று TOYOTA INNOVA – CRYSTA வாகனங்களுக்கும் பதிவு கட்டணம், சாலை வரி மற்றும் இதர வரிகள் செலுத்துவதற்கு ஆகும் தொகை ரூ.**11,09,100/–** க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
**1)**மாமன்றம் அனுமதிக்கலாம்.
**2)**மேற்படி புதிய மூன்று TOYOTA INNOVA – CRYSTA வாகனங்களுக்கும் பதிவு கட்டணம், சாலை வரி மற்றும் இதர வரிகள் செலுத்துவதற்கு ஆகும் தொகை ரூ.**11,09,100/–** யை கரூர் வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் செலுத்துவதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.
**3)** மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
**4)**மேற்படி பணிக்காகும் செலவினத் தொகையினை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/1801/2022)**

**தீர்மான எண்.306** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

